# எல்லா இராஜாக்களுக்கும் மேலான இராஜா இயேசு

## இயேசுவுக்குக் கீழ்ப்படிய சிறுவர்களுக்குப் போதிக்கவும்

**ஜெபம்:** எங்கள் பிதாவே, இயேசுவை நேசிப்பதால் சிறுவர்கள் அவருக்குக் கீழ்ப்படியுமாறு இந்த பாடத்தின் மூலம் உதவுவீராக.

சிறுவர்களுக்கான இந்த கல்வி செயல்பாட்டில் எல்லாவற்றையும் அல்லது ஏதாவது ஒன்றை தெரிந்து கொள்க.

லூக்கா 7:1-10 ல் இருந்து, இயேசுவுக்குக் கீழ்ப்படிந்த ஓர் இராணுவ வீரனைப் பற்றிய கதையை **ஒரு பெரிய பிள்ளையோ அல்லது ஓர் ஆசிரியரோ வாசிக்கலாம்.** மாபெரும் இராஜாவுக்குக் கீழ்ப்படிதலால் இருப்பதின் அர்த்தத்தை எவ்வாறு ஒரு ரோம இராணுவ அதிகாரியான நூற்றுக்கு அதிபதி புரிந்து கொண்டான் என்பதை இது காட்டுகிறது.

இந்த ரோமப் படைவீரனின் படத்தை வசதி இருக்கமானால் **சிறுவர்கள் வரையலாம் அல்லது வண்ணம் தீட்டலாம்.**

கதையைக் கூறியபின் இந்தக் **கேள்விகளைக்** கேட்கவும்.

- இயேசு தனக்கு என்ன செய்ய வேண்டும் என்று ரோம இராணுவ வீரன் விரும்பினான்? (வச.3)
- நூற்றுக்கு அதிபதிக்கு உதவுமாறு இயேசுவிடம் கேட்டது யார்? (வச.3)
- இயேசுவைப் பார்க்க நூற்றுக்கு அதிபதி ஏன் வரவில்லை? (வச.7. அவன் தன்னைத் தகுதி உள்ளவன் என்று கருதவில்லை)
- இயேசு எல்லாவற்றையும் ஆளுகிறார் என்று விசுவாசித்த நூற்றுக்கதிபதி அவர் மேல் தனக்குள்ள விசுவாசத்தை எவ்வாறு வெளிக்காட்டினான்? (7-8)
- இயேசுவிடம் தனக்குள்ள கீழ்ப்படிதலை நூற்றுக்கதிபதி எவ்வாறு காட்டினான்? (வச.7 நோயாளியான தன் வேலைக்காரனுக்கு என்ன நடக்கும் என்ற இயேசுவின் வார்த்தைகளை அவன் ஏற்றுக் கொண்டான்)



இந்தக் கதையை **நாடகம்** ஆக்குக. நாடகத்தை ஆயத்தம் செய்ய உங்கள் நேரத்தை சிறுவர்களோடு ஒதுக்கவும். எல்லா பகுதிகளையும் உபயோகிக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

**பெரியபிள்ளைகளோ பெரியவர்களோ** இந்த வேடங்களைத் தாங்கலாம்.

**கதைகூறுபவர்** (கதைக் சுருக்கம் கூறி பிள்ளைகள் பேச வேண்டியதை ஞாபகப்படுத்துதல்)

**நூற்றுக்கதிபதி**

**இராணுவ வீரன்**

**இயேசு**

**சிறுபிள்ளைகள்** ஏற்க வேண்டிய பாத்திரங்கள்:

**வேலைக்காரன்** (தரையில் படுத்து சாகப் போகும் நோயாளி போல் நடித்தல்)

**யூதர்கள்** (நூற்றுக்கதிபதியின் நண்பர்கள்)

## நாடகம், பகுதி 1, லூக்கா 7:1-7

**கதைகூறுபவர்:** கதையின் முதற் பகுதியைக் கூறவும். (வச.1-6). "நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் கூறுவதைக் கேளுங்கள்"

**வேலைக்காரன்:** ஐயா, எனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. நான் சாகப் போகிறேன்.

**நூற்றுக்கதிபதி:** இயேசு கப்பர்நகூமுக்கு வந்திருக்கிறார். அவர் உன்னை குணமாக்க முடியும். நான் அவரைப் பார்க்க ஆட்களை அனுப்புவேன் (யூதர்களிடம் கூறுகிறான்). "நண்பர்களே, எனது வேலைக்காரன் சாகக் கிடக்கிறான். அவனைக் குணமாக்கும் மாறு இயேசுவை வேண்டிக்கொள்ளுங்கள். நானே போய் அவரை அழைக்க முடியாது. ஏனெனில் அவர் மகா பெரியவர்"

**யூதர்கள்:** நாங்கள் உங்களுக்காகப் போவோம். (இயேசுவிடன் சென்று) "இயேசுவே எங்களோடு வரவேண்டும்" "ரோம நூற்றுக்கு அதிபதி நீர் அவருடைய வேலைக்காரனை குணப்படுத்த வேண்டும் என்று விரும்புகிறார்." "அவர் நல்ல மனிதன்" "அவர் எங்களுக்கு நன்மை செய்கிறார்" "நமக்கு ஒரு ஜெப ஆலயத்தையும் கட்டினார்"

**இயேசு:** நான் உங்களோடு வருகிறேன்.

## நாடகம், பகுதி 2, லூக்கா 7:7-10

**கதைகூறுபவர்:** கதையின் இரண்டாவது பகுதியைக் கூறவும் (வச.7-10) "நூற்றுக்கதிபதி கூறுவதைக் கேளுங்கள்"

**நூற்றுக்கதிபதி:** நான் இயேசுவை சந்திக்க பாத்திரன் அல்ல அவர் ஒரு வார்த்தை சொன்னாலே போதும். என் வேலைக்காரன் சொஸ்தமாகி விடுவான். (ஒரு போர்வீரனைப் பார்த்து) நீ அவரிடம் போ!

**போர்வீரன்:** "சரி ஐயா" (வணங்கி பின் இயேசுவை நோக்கி நடக்கிறான்)

**யூதர்கள்:** "நூற்றுக்கதிபதியின் வீடு வெகு தூரத்தில் இல்லை, சீக்கிரமாகப் போவோம்" "அதோ, அவர் வீரன் ஒருவனை நம்மிடம் அனுப்பி உள்ளார்."

**போர்வீரன்:** (இயேசுவிடம் சென்று) "இயேசுவே, நீர் பெரியவர் என்பதை என் தளபதி அறிவார். நீர் கட்டளை இட்டால், அதற்கு கீழ்ப்படிந்தே ஆக வேண்டும் என்பது அவருக்குத் தெரியும். அவருடைய வேலைக்காரனின் நோய் மாறவேண்டும் என்று தயவு செய்து நீர் கட்டளை இடுவீராக"

**இயேசு:** "இந்த வீரனின் தலைவன் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவது குறித்து அறிந்திருக்கிறான். என்னுடைய கட்டளையில் அதிகாரம் உண்டு என்பது அவனுக்குத் தெரிகிறது. நோயின் மேல் எனக்குள்ள வல்லமையை நம்புவதற்கு அவன் விருப்பம் உள்ளவனாய் இருக்கிறான். நான் இஸ்ரவேலில் இவ்வளவு பெரிய விசுவாசத்தைக் காணவில்லை."

**கதைகூறுபவர்:** நாடகம் முடிந்ததைக் கூறி உதவி செய்த யாவருக்கும் நன்றி கூறவும்.

சபைத் தலைவரோடு பேசி ஏற்பாடு செய்ய வேண்டியவை: குழந்தைகள்

- ஆராதனை வேளையின் போது பெரியவர்களுக்கு இந்த நாடகத்தை நடத்திக் காட்ட
- இந்தப் பாடத்தின் ஆரம்பத்தில் உள்ள கேள்விகளை பெரியவர்களிடம் கேட்க.
- தயாரித்த கவிதை போன்றவற்றை கூற.

**குழந்தைகளிடம் கேட்க வேண்டியது:** நாம் கீழ்ப்படியும்படி இயேசு கட்டளை இட்ட விஷயங்கள் எவை?

சில நாடுகளில் அரசர்கள் அணிந்திருந்த கிரீடத்தின் மாதிரியை வரையவும். குழந்தைகள் அதைப் பார்த்து வரையட்டும்.

- பெரிய குழந்தைகள் சிறுவர்களுக்கு உதவி செய்யவும் குழந்தைகள் தாங்கள் வரைந்த படங்களை அடுத்த ஆராதனை வேளையின் போது பெரியவர்களிடம் காட்டி, இயேசு இராஜாதி இராஜா. நாம் அவரை நேசிப்பதால் அவரது கற்பனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதை விளக்கவும்.



இராஜாதி இராஜன், யோவான் 14:15ல் கூறியதை மனனம் செய்க. “நீங்கள் என்னிடத்தில் அன்பாய் இருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்”

**சங்கீதம்:** மத். 28:18,19,20 ஆகிய வசனங்களை ஆளுக்கு ஒன்றாக மூன்றுபேர் ஒப்புவிக்கவும்.

‘வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது.

ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளை இட்ட யாவையும், அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்.

இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்”

நாம் ஏன் இயேசுவுக்குக் கீழ்ப்படிய விரும்புகிறோம் என்பதைப் பற்றி கவிதை, பாடல் அல்லது சிறுகதையை **பெரிய பிள்ளைகள்** எழுதட்டும்.

**ஜெபம்:** “கர்த்தாவே, நாங்கள் உமது வார்த்தைகளைக் கேட்க விரும்புகிறோம். மேலும் நீர் கூறுவதை கைக்கொள்ளவும் விரும்புகிறோம். நீர் இராஜாதி இராஜனாக இருப்பதாலும் உம்மை நாங்கள் நேசிப்பதாலும், உமக்குக் கீழ்ப்படிய விரும்புகிறோம்.”

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net